5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002-2003* ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002-2003* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *25-3-2003* ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், *2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

நிறைவேற்றப்பெற்ற 2002–2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1 மாநிலச் சட்டமன்றம்	*10,66*	-	-
2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை	*1*	-	-

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
3	நீதி நிருவாகம்	8	-	-
4	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	15,96,64	2,62,79	14,32
5	வேளாண்மைத் துறை	53	93,80	3,24,24
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- கால்நடை பராமரிப்பு	17	-	-
7	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்	7,95,63	1,59,65	3,61,10
8	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்	24,80,45	-	-
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	32	1,12,57	-
10	வணிக வரித் துறை-வணிக வரிகள்	3	-	-
11	வணிக வரித் துறை— முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு	6	-	-
12	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	14	6,66,08	2,62,16
13	எரிசக்தித் துறை	-	-	21,58,90
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	16	8	-
15	நிதித் துறை	23,93,50	-	2,00,00

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்	50,26,25	-	5,39
17 கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	4	-	-
18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,54	13,99,62	-
19 உயர் கல்வித் துறை	23	2,02,14	-
20 நெடுஞ்சாலைகள் துறை	28,36,39	12	-
21 உள் துறை—காவல்	1,19	1	-
22 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	7	-	-
23 உள் துறை-சிறைச்சாலைகள்	7	1,25,53	-
24 உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்	3	-	-
25 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	11,12,16	1,77,82	1,00,00
26 தொழில் துறை	10,49,10	19,42,65	57,53,42
27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம்	4	-	-

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா	12	20,63	-
29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு	1,57,70	36,02	-
30 தகவல் தொழில்நுட்பவியல் துறை	2	-	-
31 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	16	1,04	-
32 சட்டத் துறை	11,14	-	-
33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	7	2	1
34 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	5	-	-
35 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	11	1,85,67	-
36 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	14,75	-	-
37 பொதுத் துறை	7,62,12	-	-
38 பொதுப் பணித் துறை	80	69	-
39 வருவாய்த் துறை	25	-	-
40 ஊரக வளர்ச்சித் துறை	38	-	31,25,00
41 பள்ளிக் கல்வித் துறை	19	7,50,00	-
42 சிறு தொழில்கள் துறை	7,24,50	12,45	4,00,00
43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	34	-	-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
44 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை— தமிழ் வளர்ச்சி-பண்பாடு	10	-	-
45 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	4	-	-
46 போக்குவரத்துத் துறை	4	-	-
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	4	-	-
48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்	56,73,51	-	-
49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	426,10,97	-	-
பெருமொத்தம்	672,62,89	61,49,48	127,04,54

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு-அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.